NOTO RAPE

உயர்திரு பிரதமர் அவர்களுக்கு,

**1. ரத்துக் கோரிக்கை**

ஒரு பெண்ணின் இசைவு இன்றி பெண் உறுப்புக்குள் ஆண் உறுப்பைச் செலுத்துவதுதான் கற்பழிப்பு என்று குற்றவியல் பிரிவு 375 கூறுகிறது. ஆனால் அந்த ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக இருந்தால் சில சூழ்நிலைகளைத் தவிர்த்து அப்படிப் பட்ட செயல் கற்பழிப்பு ஆகாது என்று குற்றவியல் பிரிவு 375(4) கூறுகிறது. அதே போல் 16 வயதுக்கும் குறைந்த ஒரு பெண்ணை அப்படிப் பட்டச் செயலுக்கு உட்படுத்துவது கற்பழிப்புக் குற்றம் என்று குற்றவியல் பிரிவு 376A கூறும் அதே வேளையில் அந்தப் பெண்ணும் ஆணும் திருமணம் செய்து கொண்டவர்களாக இருந்தால் அது குற்றமாகாது என்று பிரிவு 376A(5) கூறுகிறது.

இந்தக் கோரிக்கையில் கையொப்பமிட்டிருக்கும் சிங்கப்பூர் குடிமக்களாகிய நாங்கள் குற்றவியல் பிரிவு 375(4)-ஐயும் 376A(5)-ஐயும் முற்றாக ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம். இந்த மாற்றம் மூலம் கற்பழிப்புக் குற்றம் நடைபெறும் போது அது கணவன் மனைவியிடையே நடந்ததா அல்லது முன்பின் தொடர்பு இல்லாதவரிடையே நடந்ததா என்பதைச் சட்டம் பார்க்காது. ஒரு பெண்ணின் இசைவு இன்றி பெண் உறுப்புக்குள் ஆண் உறுப்பைச் செலுத்தும் எந்தச் செயலும் கற்பழிப்பாகக் கருதப்படும். குற்றம் புரிபவர் கணவராக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி ஒரே மாதிரி தண்டனை வழங்கப்படும். Marital Rape எனப்படும் திருமணக் கற்பழிப்புக்கு இப்போது இருக்கும் சட்டப் பாதுகாப்பை முற்றாக அகற்றுவது இந்தப் பரிந்துரையின் நோக்கம்.

**2. திருமணக் கற்பழிப்பும் வன்செயல்தான்**

அனுமதியில்லாத பாலியல் பலாத்காரம் ஒரு கடுமையான வன்செயல். அதனைக் குற்றம் என்று குற்றவியல் பிரிவு 375-ம் 376A-யும் கூறுகின்றன. குற்றவியல் பிரிவு 376ம் இசைவில்லாத மற்றவித பாலியல் பலாத்காரங்களையும் (வாய், ஆசனவாயில் ஆகியவற்றில் ஆண் உறுப்பைச் செலுத்துவது, ஆண் உறுப்பைத் தவிர்த்து மற்ற உறுப்புக்களைச் செலுத்துவது) குற்றம் என்று கூறுகிறது. பிரிவு 376-க்கும் 376A-க்கும் திருமண விலக்கு கிடையாது.

NOTO RAPE

சுய தற்காப்பு போன்ற சூழ்நிலைகளைத் தவிர்த்து வன்செயல் என்பது குற்றம்தான். ஒவ்வொரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனின் வன்செயலில் இருந்து சட்டப் பாதுகாப்பு தேவை மட்டுமல்ல அவசியமும் கூட. குற்றம் புரிந்தவர் குற்றம் இழைக்கப்பட்டவரோடு திருமண பந்தம் கொண்டிருக்கிறார் என்ற ஒரே காரணத்திற்காக அது குற்றமாகாது என்ற கூற்றை நமது சமுதாயம் ஏற்றுக் கொள்ளாது. மற்ற எந்த விதமான குற்றங்களுக்கும் திருமண விலக்கு என்ற ஒன்று கிடையாது. எனவே திருமணக் கற்பழிப்புக்கு மட்டும் திருமண விலக்கு இருக்கலாம் என்பதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. மனைவியைக் கையால் குத்துவதற்கு யாருக்கும் எந்தச் சட்டமும் சிறப்பு அனுமதி தருவதில்லை. திருமணக் கற்பழிப்பு என்பதும் ஒருவகையில் குத்துவதுதான் - கையால் அல்லாமல் பாலியல் உறுப்பால். திருமணக் கற்பழிப்பு என்ற பெயரில் வழங்கப்படும் பாதுகாப்பை ஒட்டுமொத்தமாக நீக்குவதன் மூலம் பாலியல் வன்செயல் குறித்த நமது அணுகுமுறையில் தற்போது உள்ள நியாயமற்ற முரண்பாட்டை அகற்றலாம்.

அவ்வாறு செய்வது திருமண பந்தத்தை பலப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம். தம்பதியரில் ஒருவரின் வன்செயலுக்கு இன்னொருவர் ஆளாவதை திருமணம் நியாயப்படுத்தக் கூடாது. திருமணம் என்பது அன்பு, நம்பிக்கை, மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிகழும் ஒரு சங்கமம் என்றுதான் நமது சமுதாய அமைப்பு கூறுகிறது. இசைவு இல்லாத பாலியல் பலாத்காரம் எனப்படும் வன்செயல் குடும்ப உறவுகளை அழிப்பதால் அதனை ஒரு குற்றச்செயலாகக் கருதி நமது தேசம் தண்டனை வழங்குவது சரியே.

### 3. தற்போதைய விலக்குகள் போதாது

குற்றவியல் பிரிவு 375(4)-ம் 376A(5)-ம் சிலவகை திருமணக் கற்பழிப்புக்களை கற்பழிப்பு என்று வகைப்படுத்துகின்றன. உதாரணத்திற்குக் குற்றம் புரிபவரும் குற்றம் இழைக்கப்படுபவரும் தனித்தனியாக வாழ்ந்து வருவதோடு விவாகரத்து அல்லது பிரிவிற்கு ஏற்பாடு செய்து வந்தால், அல்லது குற்றம் புரிபவருக்கு எதிராகப் பொதுப் பாதுகாப்பு ஆர்டர் வாங்கப் பட்டிருந்தால்.

இது போதாது. திருமணக் கற்பழிப்பும் ஒரு குற்றம்தான். சிங்கப்பூரில் சட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டிய அவசியமின்றி

NOTO RAPE

ஒருவருக்கு சட்டம் பாதுகாப்பு வழங்க வேண்டும். அந்த மாதிரி சட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொள்வது என்பது வயது குறைந்த பெண்களுக்கும் உடல் மற்றும் மனோவியல் குறைபாடுகள் உள்ள பெண்களுக்கும் பெரிய பிரச்சனையாக இருக்கும். குறிப்பாக அவர்கள் ஒரு பெரியவரின் அல்லது உடல்பலம் நிறைந்த வாழ்க்கைத் துணையின் ஆதரவில் வாழும் போது. நீதிமன்ற ஆணையை எப்போதும் எளிதில் பெற்றுவிட முடியாது. மேலும் தாங்கள் வன்செயலுக்கு உள்ளாவோமா மாட்டோமா என்பதை முன்கூட்டியே கணிக்க வேண்டிய அவசியமும் பெண்களுக்கு இருக்கக் கூடாது. அவ்வாறு கணித்து, நீதி மன்ற பாதுகாப்புக்காக விண்ணப்பித்த பிறகுதான் பாலியல் வன்செயல் ஒரு குற்றமாகக் கருதப்படும் என்ற நிலையும் அவர்களுக்கு இருக்கக் கூடாது. திருமணக் கற்பழிப்பு - அது முதல் முறைாக இருந்தாலும் சரி இரண்டாவது முறைாக இருந்தாலும் சரி அல்லது மூன்றாவது முறையாக இருந்தாலும் சரி - ஒரு குற்றமாகவே கருதப்பட வேண்டும்.

**4. சட்ட அமுலாக்க நடைமுறைகள் உள்ளன.**

திருமணக் கற்பழிப்புக்கான சட்டப் பாதுகாப்பை முற்றாக அகற்றுவதால் நடைமுறைப் பிரச்சனைகள் ஒன்றும் உருவாகாது. நிரூபணமாகாத குற்றச்சாட்டைக் கவனிப்பதற்கு சிங்கப்பூர் குற்றவியல் நீதி முறையில் சில நடைமுறைகள் உள்ளன. காவல்துறை, தலைமைச் சட்ட அதிகாரி அலுவலகம், நீதிமன்றங்கள் ஆகியவை ஒரு குற்றத்திற்கு எதிராக உள்ள அனைத்து சாட்சியங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு குற்றம் நிரூபிக்கப்பட போதுமான ஆதாரம் இல்லையென்றால் குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால் குற்றவியல் பிரிவு 375(4), 376A(5) ஆகியவற்றின் விளைவு என்னவென்றால் குற்றத்திற்கு எதிரான ஆதாரம் இருக்கும் போது கூட இசைவு இன்றி ஆண் உறுப்பு பெண் உறுப்புக்குள் செலுத்தப்படுவதைக் கற்பழிப்பு என்று கருத முடியாது என்பதாகும்.

மற்ற குற்றங்களைப் போலவே திருமணக் கற்பழிப்பும் குற்றவியல் நீதிமுறைக்கு உட்படுத்தப் பட வேண்டும். சிங்கப்பூர் காவல்துறை புள்ளிவிவரத்தின் படி 2005-லும் 2006-லும் பதிவு செய்யப்பட்ட கிட்டத்தட்ட எல்லா கற்பழிப்புச் சம்பவங்களிலும் குற்றம் இழைக்கப்பட்டவருக்கு முன்கூட்டியே குற்றம் புரிந்தவரைத் தெரிந்திருந்தது. எனவே அந்த மாதிரியான கற்பழிப்புச் சம்பவங்களை எப்படிக் கையாள்வது என்று நமது

NOTO RAPE

நீதிமுறைக்குத் தெரியும். குடும்ப வன்செயலை எப்படிக் கையாள்வது என்றும் நமது நீதிமன்றங்களுக்குத் தெரியும். பிரிவு 376 மற்றும் 376A-யின் சில அம்சங்கள் தம்பதியினரிடையே இசைவு இல்லாத பாலியல் உடலுறவைக் (வாய் வழி அல்லது ஆசன வாய் வழி புகுத்துவது) குற்றமாகக் கருத வகை செய்கின்றன. திருமணக் கற்பழிப்புக்கான சட்டப் பாதுகாப்பை முழுமையாக அகற்றுவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட வகையான இசைவற்ற பாலியல் பலாத்காரம் மற்றவிதமான வன்செயல்களிலிருந்து மாறுபட்டது என்ற நியாயமற்ற முரண்பாட்டை நாம் அகற்றலாம்.

**5. நிறைவு.**

மேற்கூறப்பட்ட வாதங்களின் அடிப்படையில் குற்றவியல் பிரிவு 375(4), 376A(5) ஆகியவற்றை முழுமையாக அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இந்தக் கோரிக்கையில் கையொப்பமிட்டிருக்கும் நாங்கள் எங்கள் ஜனநாயகப் பிரதிநிதியான உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.